மாதர்மனோரஞ்சினி.

VOL I. புத்த. I. | MADRAS, MAY 1899. சென்னப்பட்டணம்: 1899௵ மேமீ | No. 3. இல. ௩.

அன்னபூரணி கதை.

தென்தேசத்தில் நீர்வளம், நிலவளம், பொருந்திய மலையாள நாட்டில் பொதிகமலை யென்றும், யானை மலையென்றும், பொன்மலை யென்றும் பேர்வழங்கிய ஒரு மலையிருக்கிறது. இம்மலையில் ரிஷிகள் தவம் பண்ணிக்கொண்டிருக்கிறதாக சொல்லிக்கொள்ளுகிறார்கள். இம்மலையின் அழகிய சிகரங்கள் வானத்தை அளாவி நிற்கின்றன. இதில் அனேகம் பள்ளத்தாக்குகளும், பெரிய காடுகளும், பலகுளங்களும் உண்டு. இக்காடுகளில் தேவதாரி விருக்ஷங்கள், ஆலவிருக்ஷங்கள், தேக்குமரங்கள், சந்தனமரங்கள், குங்கிலியமரங்கள், அகில்மரங்கள், கருமரங்கள், வெண்மரங்கள், செம்மரங்கள் முதலிய ஆயிரக்கணக்கான மரங்களும் யானை, புலி, வேங்கை, கரடி, முதலிய எண்ணிறந்த துஷ்டமிருகங்களும், மான், மரை, ஆடு முதலிய சாதுமிருகங்களும் மிகுதியாயுண்டு. இம்மலைச்சிகரங்களிலும், பள்ளத்தாக்குகளிலும் இவ்வழகிய மிருகங்கள் துள்ளிவிளையாடிக்கொண்டு திரிவதைப்பார்க்க மெத்தச் சந்தோஷத்தை விளைவிக்கும். இன்னும் அக்காடுகளில் தங்கள் அழகிய சிறகுகளைவிரித்து ஆடிக்கொண்டு திரியும் மயில் ஜாதிகளையும், கூவும் குயில்களையும், புறாக்களையும், கோழிகளையும் பலவிதநிறங்களையுடைய அழகிய கிளி ஜாதிகளையும், மயினாக்களையும், காடைகளையும், இன்னும் ஏராளமான பலநிறமுள்ள பலஜாதி பக்ஷிகளையும் பார்க்கலாம். அம்மலையின் பள்ளத்தாக்குகளில் லில்லி புஷ்பங்கள் புஷ்பித்து பார்ப்போர்கண்களை மகிழச்செய்யும். மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலிய புஷ்பங்கள் புஷ்பித்து கமகமவென்று அப்பள்ளத்தாக்குகள் முழுவதையும் பரிமளப்படுத்தும். அப்பள்ளத்தாக்குகளின் ஊடே ஓடும் சிற்றாறுகளில் ஓயாமல் பாய்ந்துக்கொண்டிருக்கும் பளிங்குக்குச்சமானமான தண்ணீரில் துள்ளிவிளையாடிக்கொண்டு திரியும் மச்ச ஜாதிகளையும் மிகுதியாய்ப் பார்க்கலாம். இதை வாசிக்கும் என்பிரியசகோதிரிகளே! நீங்கள் இவ்வழகிய காட்சிகளைப் பார்க்கவேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன்.

இம்மலையின் அடிவாரத்துக்கு ஏறக்குறைய பன்னிரண்டுமெயிலுக் கப்பால் மங்களபுரி யென்கிற ஓர் அழகிய பட்டணமுண்டு. அந்நகரின் தெருக்கள் நேராயும், ஒழுங்காயும், சதாசுத்தமாயு மிருக்கும். அதில் அலங்காரமாய் கட்டப்பட் டிருக்கும் அனேக மாடமாளிகைகளும், வீடுகளும் உண்டு. உலகத்தின் நாலுதிசைகளிலுமிருந்து வரும் அழகும் விலையுயர்ந்தவையுமான பற்பலசாமான்களை விற்கும் பலதேசவியாபாரிகளும் அவ்வியாபாரங்களைக் கண்டோர் வியக்கும்படி ஒழுங்குபடுத்தியிருக்கும் நேர்த்தியானகடைகளும் பல அங்கே உண்டு. அப்பட்டணத்தின் மத்தியில் இயற்றிய ராஜபிரிதிநிதியின் அழகிய அரண்மனையும் பற்பல பாகங்களில் காண்போர் அதிசயிக்கத்தக்க விதமாய் கட்டப்பட்டிருக்கும் நியாயஸ்தலங்களும் மற்றும் சர்க்கார் கட்டிடங்களும் பலமதஸ்தரான அந்நகர்வாசிகள் தொழுதற்காக அங்கங்கே சிற்பசாஸ்திரப்படி அமைக்கப்பட்டிருக்கும் தேவாலயங்களும் அந்நகரத்துக்கு ஆபரணங்கள் போலிருக்கும். அந்தப்பட்டணத்தின் சிறப்பைக் கண்டோர் எல்லோரும் பிரமித்து இந்நகரம் பூமிக்கு அலங்காரமான ஒரு இரத்தினம்போலிருக்கிறதென்று புகழ்வார்.

இந்த நகரத்துக்கும் முன்சொல்லிய மலை அடிவாரத்துக்கும் மத்தியில் ஏறக்குறைய சமதூரத்தில் ஒரு சிறுகிராமம் இருக்கிறது. அவ்வழகிய கிராமத்துக்கு சாந்தபுர மென்று பேர். இவ்வூரின் வடபுறத்தில் அழகான ஒரு தெப்பக்குளம் உண்டு. இது சாதாரணக் குளங்களைவிட மிகப்பெரிது. இக்குளத்தின் மத்தியில் ஒரு சிறுதீவும் அதில் ஒரு அழகிய மாளிகையும் தோட்டமுமிருக்கிறது. அத்தோட்டத்தில் பலவகையான கனிமரங்களும் விதம் விதமான பூச்செடிகளும் உண்டு. மங்களபுரியிலிருந்து ஐரோப்பிய துரை துரைசானிகளும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் அடிக்கடி இம்மாளிகையில் வந்து ஒன்றிரண்டுவாரம் தங்கிப்போவார்கள். இவர்களுடைய சவுகரியத்துக்காகவும் காலைமாலைகளில் அக்குளத்தில் விளையாட்டாகக் காலங்கழிக்கவும் சில ஓடங்கள் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. இத்தெப்பக்குளத்தில் அன்னபட்சிகளும், தாரா, வாத்து முதலிய பலவிதபட்சி ஜாதிகளும் சதாகாலம் நீந்திவிளையாடிக்கொண்டு திரியும். அவ்வூர்ஜனங்கள் இப்பட்சிகளை அருமையாய்ப் பார்த்துவருவதால் ஒருவரும் அவைகளை தொந்தரிக்கிறதில்லை. அவைகள் சதாகாலமும் அக்குளத்தை விட்டு நீங்காமல் அக்குளத்தில் புஷ்பித்திருக்கும் செந்தாமரை புஷ்பங்களையும் அங்கு ஸ்னானம் பண்ணவரும் ஸ்திரீ புருஷர்கள் நாடோறும் கொண்டுவந்துபோடும் போஜனபதார்த்தங்களையும் தின்று உல்லாசமாயிருக்கும். ஒருவருக்கும் அவைகள் பயப்படுகிறதுமில்லை. ஒருவரும் அவைகளை பயப்படுத்துகிறதுமில்லை. இக்குளத்தின் மேற்

புறத்தில் ஒரு தேவாலயமும் அதின் வடபுறத்தில் தெற்குமுகமாய் கட்டப்பட்டிருக்கும் இரண்டடுக்கு மாடியுள்ள ஒரு அழகியபங்களாவும் அதைச்சேர்ந்த ஒரு நேர்த்தியானதோட்டமும் உண்டு. அத்தோட்டத்தில் பற்பலவிதமான மரங்கள் உயரமாய் வளர்ந்து அதின் கிளைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதால் வெய்யிலென்பதே தெரியாமல் எப்போதும் நிழலாகவேயிருக்கும். அம்மரங்களில் சதாகாலமும் புத்திரபௌத்திர பரம்பரையாய் குடியிருக்கும் பக்ஷிகளின் இன்பமான குரலோசைகளைக் கேட்பது செவிக்கு இன்பமாம். அங்கே ஆயிரக்கணக்கான கிரோட்டன், ரோஜா, மல்லிகை, முல்லை முதலிய பூச்செடிகளும், மாமரம், பலாமரம், கொய்யா, சீதா, முதலிய கனிமரங்களும், மாதுளை, அப்பில், கிச்சிலி, அத்திமுதலிய பழச்செடிகளும், திராக்ஷைச்செடி, வாழை, கமுகு, முதலிய விருட்ச சாதிகளும் ஏராளமாயுண்டு. இக்கனிவிருக்ஷங்கள் ஒன்றுமாற்றிஒன்று வருஷத்தின் எல்லாக்காலங்களிலும் கனி கொடுத்துக்கொண்டே வருவதால் அத்தோட்டத்தில் கனியிராதகாலமே கிடையாது. தீவிலுள்ள பங்களாவுக்கு வரும் ஒவ்வொரு துரை துரைசானியும் இத்தோட்டத்தை தரிசிக்காமல் போகமாட்டார்கள். தோட்டத்தைப் பார்க்கவருபவர்கள் உட்காரும்படியாய் அதின் பலபாகங்களிலும் பாதையோரங்களில் அல்லது பாதை சந்திக்குமிடங்களில் இரும்பு, கல் அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஆசனங்கள் போடப்பட்டிருக்கும். இக்கிராமமும், வீடும், தோட்டமும், **கனகாசலம்பிள்ளை** யென்ற ஒருவருக்குச் சொந்தமானது. அதில் அவரும் அவர்பத்தினி **செல்வத்தம்மாளும்** குடியிருந்தார்கள். **கனகாசலம்பிள்ளை** அவ்வூரில் பெரியகுடித்தனக்காரர். அவருக்கு அனேகம் வேலைக்காரரும் வேலைக்காரிகளும், மிகுந்த ஆடுமாடுகளும், கிராமங்களும் இருந்தன. இவர் பாட்டனார் **தெய்வநாயகம்பிள்ளை** மங்களபுரியில் அனேகவருஷங்களாக ஜட்ஜ் (நியாயாதிபதி) உத்தியோகம்செய்து பென்ஷனானபின் சாந்தபுரத்துக்குவந்து சிலவருஷங்களிருந்து இறந்துபோனார். மார்பிள்கல்லினால் அவரைப்போல் பிரதிமையொன்று கெட்டிக்காரனான ஒரு சிற்பசாஸ்திரியால் **லண்டன்** பட்டணத்திலே செய்யப்பட்டு மங்களபுரி ஐகோர்ட்டு முகப்பில் நிறுத்தியிருப்பதைப்பார்க்கலாம். **தெய்வநாயகம்பிள்ளைக்கு மூத்தையபிள்ளை** யென்றவர் ஒரேமகன். அவர்தான் நம்முடைய **கனகாசலம்பிள்ளையின்** தகப்பன். அவர், மங்களபுரிக்கு முப்பதுமயில் தூரத்திலுள்ள **ஜோதிபுரத்தில்** சப்கலெக்டர் உத்தியோகம் செய்து திரண்டதிரவியம் சம்பாதித்தார். இவருக்கு தாரம் இரண்டு; முதல்தாரம் திருவநந்தபுரத்தில் திவான் உத்தியோகமாயிருந்த பொன்னம்பலம்பிள்ளையின் மகள் **கமலம்**. ஜாதியில் பொன்னம்பலம்பிள்ளை மூத்தையபிள்ளை

க்கு சற்றுகுறைவானவர். பொன்னம்பலம்பிள்ளையின் பாட்டியா ரைப்பெற்றவள் மலையாளத்து அச்சிகளில் ஒருத்தியென்றும் ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் 'முண்டு கொடுத்து' வைத்திருந்தா ரென்றும் வதந்தி. பொன்னம்பலம்பிள்ளையைச் சேர்ந்தவர்கள் எல் லாரும் மகாராஜாவின்கிழ் பெரியஉத்தியோகம் பார்த்துவந்ததால் பழ யஜாதி மங்கிப்போய் சைவவேளாளர் என்றபேர் உண்டாயிற்று. முத் தையபிள்ளைக்கு முதலில் பொன்னம்பலம்பிள்ளையின் வம்சத்தைக்கு றித்து தெரியாதிருந்தும் கலியாணமாக கொஞ்சநாளைக்குமுன் திரு வநந்தபுரத்திலிருந்த ஒரு நண்பன் மூலமாய் தெரியலானார்.

அப்படியிருந்தும் 'இந்து சீர்திருத்தச் சங்கத்தில்' அனேகவருஷங் களாக மெம்பராகவிருந்து ஜாதி வித்தியாசத்தைக் குறித்து எதிர்த் தும், விதவை புனர்விவாகத்தை அநுசரித்தும் அனேகபுஸ்தகங்கள் எழுதி பிரசித்தம் செய்திருந்தபடியால் இயல்பிலேயே ஜாதி வித்தி யாசம் பார்த்தல் தவறு என்பது இவர்மனசில் பலமாய் வேரூன்றி யிருந்தது. ஆனபடியால் அவர் பொன்னம்பலம்பிள்ளையைக்குறித்து அறிந்த இச்சங்கதியை மனசில் வைத்துக்கொண்டு யாதொருவரிட மும் ஒன்றும் பேசாமல் கலியாணத்தை முடித்துவிட்டார். கமலத் துக்கு கலியாணசமயத்தில ஏறக்குறைய பதினெட்டு பிராயம். அவள் சிவந்தமேனியும் மிகுந்த அழகும் உள்ளவள். அதிகஉயரமும் குட் டையு மில்லாமல் நடுத்தரமான உயரமாயும், உருண்டைமுகமும் கருத்தகண்களும், நீண்டகழுத்தும் மெலிந்த தேகமும் உடையவள். அவள் தலைமயிர் கருப்பாயும் அதிக நீளமாயுமிருந்தது. இனிய குர லோசையுள்ளவள். அப்படியிருந்தும் அவள் நற்குணமுள்ளவளல்ல வென்பது முகக்குறிகளால் யாரும் எளிதிலறிந்து கொள்ளக்கூடிய தாயிருந்தது. கமலம் முத்தையபிள்ளை வீட்டுக்கு வந்து சிலநாட்களு க்குள் மாமியாருக்கும் மருமகளுக்கும் மனஸ்தாபமாகி விட்டது. அற் பகாரியங்களுக் கெல்லாம் மனஸ்தாபம் பண்ணிக்கொண்டு அண்டை வீட்டில் போயிருந்து கொள்வாள். மாமியார் மருமகளை கண்டிக்க வேண்டியிருக்க மருமகளே மாமியாரை ஏசவும் பேசவும் ஆரம்பித் தாள். ஏழை முத்தையபிள்ளை என்ன செய்வார்? கமலத்தைக் கலியா ணம் பண்ணினது சனியனை விலைக்கு வாங்கினது போலாய் விட் டது. இவ்வளவு காலமும் வீட்டுச்சத்தம் வெளிக்குத் தெரியாமல் சமாதானமும் சந்தோஷமுமாயிருந்த வீட்டில் சண்டையும், மனஸ் தாபமும், வாக்குவாதமுமாய்விட்டது. அவள் முக அழகு எவ்வ ளவு நன்றாயிருந்ததோ அதற்கு அவள்குண அழகு சுத்தவிரோதமாயி ருந்தது. புருஷன் வடக்கே போகச்சொன்னால் அவள்தெற்கே போ வாள். தகப்பனுருடைய ஸ்தானத்தில் தானேதிவான் உத்தியோகம்

பண்ணுவது போலவும், தன்புருஷனையும் மாமியாரையும் தன்சேவகர்கள் போலவும், நினைத்துக்கொண்டாள். இவள் சீமானுக்குப் பிறந்திருந்த போதிலும் இவளைப் பிடித்திருந்த பணப்பைத்தியமும் நகைபைத்தியமும் இவளை அற்பனுடைய மகளைப்போல நினைக்க ஏதுவாகிற்று. தனக்கிருந்த நகைகளை ஒன்றொன்றாய் போடுவதும் கண்ணாடியில் பார்ப்பது மாயிருப்பாள். அப்படியே நொடிக்கொருதரம் ஒரு பட்டுக்கட்டுவதும் அவிழ்ப்பது மாயிருப்பாள். நகைப் பைத்தியமும் உடைப்பைத்தியமும் இவளுக்கிருந்த போதிலும் படிப்பில் பைத்தியம் கிடையாது. படிப்பென்றால் இவளுக்கு விரோதம். தகப்பன் எவ்வளவோ படிப்பாளியாய் உயர்ந்த உத்தியோகத்திலிருந்த போதிலும் மகளை மூடமாக வைத்திருந்ததைப் பார்த்தீர்களா? இப்படிப்பட்ட தகப்பன்மார் தாங்கள் நேர்த்தியான ஆகாரம் சாப்பிட்டு பிள்ளைகளை பட்டினியாய் வைத்திருப்பது போலல்லவா? எத்தனையோ குடும்பங்களில் பெண்பிள்ளைகளை மூடங்களாக வைத்திருக்கிறார்கள்! படிப்பில்லாத பெண்களை படிப்பாளிகளான புருஷர்களுக்கு கலியாணம் பண்ணிக் கொடுக்க அப்பெண்கள் புருஷர் வீட்டுக்குப் போனபின் அங்கே ஆண்களைப்போல் பெண்களும் படித்திருப்பதைக்கண்டு தங்களைக்குறித்து வெட்கப்படுகிறார்கள். இதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். படிப்பில்லாத பெண்களை மற்ற பிள்ளைகளெல்லாரும் முக்கியமாய் மச்சான் கொழுந்தன் மச்சினிச்சி இவர்கள் சேர்ந்து கொண்டுபரிகசிக்கிறதைப் பார்ப்பது வேடிக்கையாயிருக்கும். சில வீடுகளில் கொழுந்தனயிருக்கிறவன் புதிதாயிருக்கிற படிப்பில்லா மதினியைப்பார்த்து மதினியாரே! மேசையின்பேரிலிருக்கிற இந்துதேச சரித்திரத்தை அண்ணா கேட்கிறார்கள் எடுத்து வாருங்கள் என்று கேட்கவும் மதினியார் சிவத்தபுத்தகமா கருத்தப்புத்தகமா வென்று கேட்டு இந்துதேசசரித்திரத்துக்குப்பதில் நளச்சக்கிரவர்த்திகதையை தூக்கிக்கொண்டு கொடுக்கவும் எல்லாரும் கேக்கே என்று கைகொட்டிசிரிப்பார்கள். ஒருவீட்டில் பேரப்பிள்ளைகள் பேத்திப்பிள்ளைகளெல்லாம் சேர்ந்து கொண்டு படிப்புத்தெரியாத பாட்டியாரைப் பார்த்து பாட்டி! பாட்டி! உங்கள் மகனுக்கு என்னவேலைஎன்று கேட்க பாட்டியார் இன்ஸ்பெக்டர் என்று சொல்வதற்குப்பதில் "இங்கிருசு பெட்டர்" என்று சொல்லவே பிள்ளைகளெல்லாரும் கேக்கே என்று கைகொட்டிச்சிரித்ததை நான் பார்த்திருக்கிறேன். படிப்பில்லாதவர்களுக்கு வழக்கமாய் புத்திக்கூர்மையும் குறைவு. அதற்கொருதிருஷ்டாந்தம். ஒருநாள் என்னுடைய மகன் தன் கையில் ஒரு துரைசானிபடத்தை வைத்துக்கொண்டு என் சிறியதாயாராகிய படியாத அவன்பாட்டியாரிடத்தில் போய் பாட்டி, பாட்டி, ஐயா படத்தைப்பாருங்கள் நன்றாயிருக்கிறதாவென்று கேலிக்குகாண்பித்துக்

கேட்க அந்த அம்மாள் நன்றாய் பார்த்துவிட்டு என்மருமகனுடைய சாயல் சரியாயிருக்கிறது. முகமும், மூக்கும், கண்ணும், உதடும், எங்கே போகும்? பார்த்தவுடன் தெரிகிறதேஎன்றுசொல்ல, கூடியிருந்த எல்லாரும் வயிற்றைப்பிடித்துக்கொண்டு சிரித்தார்கள். இதுமட்டுமா? சில வேளைகளில் பிராணனுக்கே மோசமாய்விடுகிறது. ஒருநாள் ஒருவீட்டில் எட்டுவயசுள்ள குழந்தை சுகயீனமாயிருந்தது. தகப்பனார் ஆஸ்பத்திரிக்குப்போய்ச் சொல்லி பிள்ளைக்கு வெளிக்குப்போட நஞ்சுமருந்து கலந்திருந்த தைலம் ஒரு சீசாவிலும் உள்ளுக்குச் சாப்பிடமருந்து ஒரு சீசாவிலுமாக இரண்டு சீசாவில் மருந்து வாங்கிவந்து பெண்சாதியிடத்தில் கொடுத்து இது உள்ளுக்கு கொடுக்கிற மருந்து இது வெளிக்குப்போடுகிற மருந்து என்று சொல்லி கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டார். பெண்சாதி சீசாவின் மேல் ஒட்டி யிருந்ததை படித்தறியாதவளாகையால் வாசிக்க அறியாமல் வெளிக்குப்போடவேண்டியதை உள்ளுக்கு கொடுத்து விட்டதால் மறுநிமிஷத்தில் அந்த எட்டு வயசு மகன் பிரேதமானான். தன் தப்பிதத்தினாலும் மதியீனத்தினாலும் பிள்ளையிறந்து போனதென்று அறிந்த தாய் அந்த துக்கத்தைதாங்கமுடியாமல் சீசாவில் மீதியாயிருந்த மருந்து முழுவதையும் தான்சாப்பிட்டு இறந்து போனாளாம். பெண்பிள்ளைகளுக்கு படிப்பித்துக்கொடுப்பது நல்லதல்ல வென்று சொல்லும் பெரியோர்! தகப்பன்மார்! இனியாவது தங்கள் புத்திரிகளுக்கு கல்வியூட்டுவார்கள்.

(இன்னும் வரும்.)

ஓர் மாது.

சாவித்திரி சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

இது நிற்கச் சாளுவ தேசாதிபன் நாட்டையும், கண்ணையும் இழந்திருந்தான். தன்மாதிரி கண்ணிழந்தமனையாளோடும் புத்திர இரத்தினமாகிய சத்தியவானோடும் ஒருகாட்டில்வந்து சேர்ந்து அங்கே ஒரு பர்ணசாலை (கூரைவீடு - ரிஷிகள் வசிக்குமிடம்) கட்டிக்கொண்டு "தலையில் எழுதின எழுத்தை யார்தான் அழிக்கவல்லார்" என்கிற பழமொழியை நினைத்துக்கொண்டு நாள்கழித்து வந்தான். சத்தியவானும் "ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக்குதவாவன்னம்" அன்றோ? என்றுகருதி, தாய்தந்தையர்களைச் சரிவர பாதுகாத்து வந்தான். அவன் தினந்தோறும் அதிகாலையிலெழுந்து ஸ்நானத் தியானித்து

நித்திய கருமங்களை முடித்து மாதாபிதாக்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு, வெளியேபோய் தங்களுடைய போஜனத்துக்கு வேண்டிய கந்தமூல பலவர்க்கத்தைச் சம்பாதித்து, விருத்தாப்பியர்களான தாய்தந்தைகளுக்கும் பிரியமானவைகளைக் கொடுத்து தான் மிச்சமான கந்தமூலங்களால் பசியை யாற்றிக் கொள்வது வழக்கம். இவ்விதமாகத் தாய்தந்தைகளைச் சம்ரக்ஷித்துக் கொண்டுவந்த சத்தியவான் ஒரு நாள் வழக்கம்போல் காய் கிழங்கு சம்பாதித்து வர வெளியே போயிருந்தான். அத்தருணத்தில் இடிமுழக்கம்போல் ஒரு பெரிய சத்தம் பர்ணசாலையினருகில் உண்டாயிற்று. அது கேட்டு அந்த குருட்டுக் கிழவனும், கிழவியும் தங்கள் நாட்டையபகரித்துக்கொண்ட சத்துருமன்னன் வந்து விட்டானென்று நினைத்து "நாட்டைப் பிடுங்கிக் கொண்டது போதாதா, காட்டிலேயும் நம்மை வருத்த வந்து விட்டானே பாவி" என்று கரைந்து நடுநடுங்கி துக்கம் மேலிட்டவர்களாயிருந்தார்கள். அப்பொழுது மத்திரதேசாதிபதியாகிய அசுவபதியும் தன்பெண்மணியாகிய சாவித்திரியம்மாளுக்கு விவாகத்தை முடிக்கக் கருதி அவளைச் சிவிகையிலேற்றித் தன்னுடைய மந்திரி பிரதானி முதலானோரும் தன்னைச்சூழ்ந்துவர, ரத கஜ துரகபதாதிகளடங்கிய நால் வகைச் சேனையோடும் பதினெண் வாத்திய முழக்கத்தோடும் அக்கிழட்டுத்தம்பதிகள் வாசஞ்செய்யும் ஆச்சிரமம் வந்து சேர்ந்தான். அதன்பின் அசுவபதியும் பல்லக்கிலிருந்திறங்கின தன் மகளையும், மந்திரி பிரதானிகளையும் அழைத்துக்கொண்டு உட்புகுந்து பார்வதியும், பரமசிவனும்போல விளங்காநின்ற அந்தக் கிழத்தம்பதிகளைச் சாஷ்டாங்கமாய்த் தனதுபேரைச் சொல்லிக்கொண்டு தானும் நமஸ்கரித்து தன்பெண்ணையும் அவ்வாறே வணங்கச்செய்தான். அது கண்டு அக்கிழத்தம்பதிகளும் "இதென்ன ஆச்சரியம்! நம்மை இப்பொழுது வணங்குகிறவர்களும் உலகத்திலுண்டோ" வென்று நினைத்துத்திகைத்துவணங்கிய அசுவபதியையும் அவன் குமாரத்தியையும் தகுந்தபடி வாழ்த்தி அவர்களையும் மந்திரி முதலானவர்களையும் உட்காரச் சொல்லி வந்தகாரியம் என்ன என்று வினவினார்கள். அது கேட்ட அசுவபதிமன்னனும் "சுபகாரியமாய் வந்திருக்கிறோம் தங்கள் அருமை மகன் சத்தியவானுக் கென்மகளாகிய சாவித்திரியை மணஞ்செய்விக்க இசைந்தே இவ்வளவு தூரம் நடந்துவந்தேன். என்னுடைய சுற்றத்தாரும் வந்திருக்கின்றனர். அதற்கிணங்கவேண்டுமென்றே வேண்டுகிறேன்" என்று சொன்னான். அதுகேட்ட சாளுவதேசாதிபனும் நகைத்து "நாங்கள் கொடிய முன்வினைப்பயனால் நாடிழந்து நகரிழந்து பின்னும் கண்ணுமிழந்து காட்டில் கரந்துறைகிறோம். என்மகனுக்கு மணம் ஒன்றுதானோகுறைவு?" என்று மிகவருத்தத்துடன் சொல்லிமுடித்தான்.

அசுவபதி "உலகத்தில் சுகதுக்கங்கள் இயற்கையே. 'செல்வம் சகடக்கால்போல்வரும்' என்கிற பெரியோர்கள் வாக்கியத்தைக் கேட்டதில்லையோ? 'வண்டி ஓடத்திலேறும் ஓடம் வண்டியிலேறும்' என்று சாதாரணஜனங்கள் சொல்வது பொய்யோ? தரையில் கிடக்கிறவன் தரையில்தான் கிடக்கிறானே பாயில்கிடக்கிறவன் பாயிலேதான் கிடக்கிறானே என்று பெண்கள் சொல்வது மெய்யல்லவோ? இளைத்தவர் இளைத்தேயிரார் கிளைப்பதுமுண்டு. பாருங்கள் பாக்கியம் வருவதும் போவதும் நம்செயலல்ல. தெய்வாதீனமான விஷயத்தில் நாமென்ன செய்யக்கூடும் மனிதர்கள் துன்பங்களுக்கே யுள்ளாயிருக்கிறார்களா? இரவென்றும் பகலென்றும் காலத்தைப்பிரித்து யாகம் முதலான நித்திய நைமித்திய (நியமிக்கப்பட்ட) கருமங்கள் நடக்கும்படி செய்விக்கிற சக்தியுள்ள சூரியசந்திரர்களும் தினந்தோறும் தப்பாமல் சுகதுக்கத்தைமாற்றி அனுபவித்துவருவது நமக்கெல்லாம் புலப்படவில்லையா? அறுபது நாழிகையுள்ள ஒருநாளில் சூரியன் சுகத்திலிருப்பது முப்பது நாழிகைதானே? இராக்காலமெல்லாம் அவன் இருந்தவிடந் தெரியாமல் கஷ்டப்படுவதை நாமறியோமா? சந்திரனுக்குத்தான் நீடித்தசுகமுண்டா? அவனும் இராக்காலம் முடிய சுகத்தை யனுபவித்து பகற்காலமெல்லாம் வாடிவதங்கிக் கிடக்கிறதை யார்தான் அறியார்? இம்மாதிரி சந்திரசூரியர்களுடைய சுகதுக்கத்தைப் பார்த்தபிறகாவது உலகத்தில் சுகமுந் துக்கமும் நிலையல்ல. ஆகையால் இன்பம் வந்தகாலத்தில் நாம் தலைதெரியாமல் கூத்தாடக் கூடாதென்றும், துன்பம் வந்தசமயத்தில் மிகவேங்கிப்போகாமல் தைரியமாய் இருக்கவேண்டுமென்றும் அறிந்துகொள்ள வேண்டுவதில்லையா? ஆகையால் தாங்கள் துக்கம்பாராட்டாமல் தைரியமாகிற கப்பலைக்கொண்டு துன்பமாகிய கடலைக்கடக்க வேண்டும். "ஆபத்துக்காலத்தில் தைரியமும் சுகப்படுங்காலத்தில் பொறுமையும் சபையில் நாணமல் பேசுதலும், யுத்தத்தில் பாரக்கிரமத்தைக்காண்பித்தலும் விவேகம் நிறைந்த புருஷர்களுடைய தன்மையல்லவா?" என்று பலவாறும் தேறுதல் சொல்லி, "பிறகுஉமது மகனாகிய சத்தியவானுக்கு நாங்கள் வந்த சமாசாரத்தைத் தெரிவித்து என் மகளை மணஞ்செய்து கொள்ள கட்டளையிடவேண்டும்" என்றுவேண்டிக் கொண்டான்.

(இன்னும் வரும்.)

என். சாமிநாத சாஸ்திரியார்.

சுந்தரவல்லி மரகதவல்லி சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

முத்தமிழ்க்கவிஞன் உள்ளங்குளிர்ந்து என்னபாடலைச்சொல்ல தங்களுக்கிஷ்டம் பழையபாடலா அல்லது நூதனமாகச் சொல்லவேண்டும் பாடலா என்று அடிபணிந்துவேண்ட,

அரசன் அரசியின் மனதின்படியே சிவபெருமான் புகழைப்பற்றி புதிதாயொருபாடலியற்றும்படி வேண்ட அதற்குப்புலவர்

விருத்தம். இராகம் - சாவேரி.

மதிதனைத் தலையிற்சூடி மழுவதைக் கையிலேந்தி
நதிதனைத் தலையிற்றங்கி நங்கையை யிடப்பால்வைத்து
பதிதொறும் பலபேர்பெற்றுப் பரஞ்சுடராகி நிற்கும்
துதிபெறுஞ் சிவத்தின்சீர்மை தூயரே சொல்லவல்லார்.

என்றுமுடிக்க அரசன் மகிழ்ந்து ஏதோ ஒரு கிருஷ்ணகர்ணாமிர்தம் பாடும்கேட்க விருப்ப மிகுதியாயிருக்கிறதென்று குறிப்பிட அதற்குப்புலவர்

கட்டளைக்கலித்துறை. இராகம் - பைரவி.

எடுத்தான் மலையை யெடுத்தே மகிழ யிதமுடனே
பிடித்தான் குடையாய்ப் பெரியவர் வேண்டிய பேருடனே
நடித்தான் புஜங்கங் கரங்கொண் டெவர்க்குமே நானிலத்தின்
மிடித்தா னனுகா வணஞ்செய் யிறைவனை மேவுதுமே.

என்னும் கர்ணாமிர்தப்பாடலை மனங்களிக்கப் பாடியவுடன் சந்தோஷித்துப் பேரின்பப் பாடல்கள் போதும் ஒரு சிறிய சிற்றின்ப பாடல் சொல்லும் எனவே—

இராகம் - நாதநாமக்கிரியை.

மெல்லமெல்ல நடைநடைக்கும் வஞ்சிக்கொடியே—அடி
சொல்லச்சொல்ல வாய்திறக்கா வண்ணமென்னடி
கொஞ்சிக்கொஞ்சி பேசுநல்ல செல்லக்கிளியே—அடி
மிஞ்சிமிஞ்சி கைவீசும் மேன்மையென்னடி.

இந்தப்பாடலைக் கேட்ட பத்மசிலமகாராஜன் சந்தோஷசாகரத்திலாழ்ந்து, போதும் என்னுள்ளம் சொல்லக்கூடாத ஆநந்தத்திலமுந்தியது, "பிரதானி இவர்களுக்குத்தக்க வெகுமதியளித்து வீட்டிற்கனுப்பும்; நமக்கு மனச்சங்கட முண்டாகுங் காலத்தில் இவரை வரவழைத்து இன்பமூட்டும் நவரசம் வாய்த்த இவரது பாடலைக்கேட்டால்

எவ்வளவு சுகமுண்டாகும்?' என்று அரசன்சொன்னார். அதற்குச் சமஸ்தானக் கவிராஜன் அடிபணிந்து

விருத்தம். இராகம் - முகாரி.

தேமணக்கு மிவ்வூரிற் சிறந்தசெல்வம்
தேடறியாப் பான்மையனேன் பிழைப்பதெங்ஙன்
பூமணக்குஞ் சோலையினிற் புரண்டேகிற்கும்
புண்ணியர்காள் கல்வியினாற் பயனொன்றில்லை
நாமணக்குங் கவிபாடிப் பரிசுகேட்பில்
ஞாலத்திற் களிகூர்ந்து கொடுப்பாரில்லை
பாமணக்கும் பண்டிதனென் றரியபட்டம்
படைத்திருந்தும் வறுமையினாற் றளர்கின்றேனே.

என்னும் பாட்டைப்பாடித் தன்குறைகளைக்குறித்து முறையிட்டார். அதைக்கேட்ட பத்மசீலன் மனமிரங்கி 'நாமிந்தவூரில் அரசாட்சி செய்கிறவரைக்கும் உமக்குயாதொன்றுங் குறைவில்லை உமது வறுமைப்பிணி யின்றோடே தொலைந்துவிட்டது; இந்தக்காலத்தில் தமிழின்பெருமையை அறிந்து வெகுமதியளிப்பவர்கள் அநேகரில்லை. ஆயினும் வசனரூபமாக எழுதப்பட்ட காவியங்கள் அதிகமில்லாமையினால் அந்தவிஷயமாக உம்மைப்போலொத்த கவிஞர்கள் பாடுபட்டால் உலகத்தார்க்கு அதிக பிரயோசனமுண்டாகும்' என அதற்குப் புலவர் 'மகாராஜாவேதாங்களிட்ட கட்டளையைத் தலையின்மீதுவைத்து மிசப்பயபக்தியுடன் செய்துவருவேன். ஆயினும் எனக்குண்டாகிய குறைகள் இவ்வளவவ்வளவல்ல நான் துக்கசாகரத்தி லமுந்தியிருக்கின்றேன்.

விருத்தம். இராகம் - முகாரி.

'அன்பிலா மனைவியு மக்களும் அசட்டை செய்திடு மன்னையும், இன்பிலாதருந்திடு மன்னமும் இனிய மெத்தையின் மஞ்சமும், என்பெலா முருக்குநோய் வெம்மையும் ஏளனஞ் செய்திடுஞ் சுற்றமும், என்பொலா விதியினால் வாய்த்திடும் ஏழைமைக் கென்செய்வேன் தெய்வமே.'

என்று பிரலாபிக்குங்காலையில் பத்மசீலனும் ஆநந்தவல்லியும் தைரியஞ்சொல்லிப் புலவரின் மனதைத் தேற்றினார்கள்.

இப்படியிருக்கும் சமயத்தில் அரண்மனைவாசலில் திடீரென்று ஒருகூச்ச லுண்டாயிற்று. அது இன்னதென்று கேட்டுவர மதியூகி சென்றவுடன் மற்றொரு மார்க்கமாக ஒரு சேவகன் ஓடிவந்து 'மகாராஜாவே தங்கள் அருமைப்புத்திரிகளைக் காணோமென்று தோழிமார்கள் புலம்பிக்கொண் டிருக்கிறார்கள். அந்தச்செய்தியைத் தங்கள்சமு

கம் விண்ணப்பம்செய்ய வந்தேன்' என்று தெண்டனிட அரசனும் அரசியும் உடனே புறப்பட்டுத் தம்புத்திரிகள் தங்குமிடத்திற்கு வந்து பார்க்கையில் அவர்கள் எங்கும் புலப்படவில்லை. அரசனுக்கு அதிக மனவருத்தமுண்டாகி அவர்களிருந்த ஒவ்வொரு அறையையும் சோதித்துப்பார்க்கையில் ஓரிடத்தில் ஒரு கடிதமகப்பட்டது. அக்கடிதம் பத்மசில மகாராஜாவுக்கு எழுதப்பட்டிருந்தது.

எமதருமைத் தந்தையே,

நாங்களிருவரும் தங்கள் உத்திரவின்றி அரண்மனை வாயிலினின்றும் பெயர்ந்ததற்காக மன்னிக்கவேண்டுகிறோம். எங்களைப்பற்றித் தங்களுக்குக் கவலையொன்றும் வேண்டியதில்லை. சன்மார்க்கவிஷயமன்றித் துன்மார்க்க விஷயமாகச் சென்றோமென்று அஞ்சவேண்டியதில்லை. நாங்களிரண்டுபேரும் இன்றைக்கெட்டாநாளிவ்விடம்வந்து சேர்ந்துவிடுகின்றோம். பின்பு சங்கதிகள் வெளிப்படையாகத் தெரியவரும். எங்கண்மீது கோபிக்கவேண்டாம்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள புத்திரிகள்,
மரகதவல்லி,
சுந்தரவல்லி.

இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் இராஜாவுக்கு உண்டாகிய கோபத்திற்களவில்லை. உடனே தனதிடத்தில் சேவிக்கும் இரண்டு போர்வீரர்களாகிய வெங்கோபராவ், வீமராவ் இவர்களைக்கூப்பிட்டு 'என்னுடைய பெண்களிருவரும் எவ்விடத்தில் அகப்பட்டாலுஞ்சரி அவர்களைக் கைப்பிடியாகப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டிவ்விடம்வந்து சேரவேண்டியது. அப்படி மூன்றுநாளைக்குள் வந்துசேராவிட்டால் உமக்குச் சிரச்சேதம் நேரிடும்' என்று இடிஇடித்ததுபோல ஆக்ஞாபித்தான்.

௩-ம் அத்தியாயம்.

விருத்தம். இராகம் - காம்போதி.

பாமர ரிருளைநீக்கிப் பதிந்திடு ஞானம்போலுங்
காமுக ரெதிரில்நிற்கும் காதலி வதனம்போலும்
வாமிகள் போற்றுந்தெய்வ வனிதையி னுருவம்போலுங்
காமர்பூஞ் சோலைதன்னிற் கதிரவனுதயஞ் செய்தான்.

கிழக்கு வெளுத்தது. சூரியன் கீழ்த்திசையில் உதயமாயினன். பூமியைச்சுற்றிலும் நிறைந்த பனியும் நீங்கிற்று. ஆனபோதிலும் அப்

பனியின் குளிர்ச்சியானது சற்றும் நீங்கவில்லை. மெய்ஞ்ஞான புரத்திலுள்ள ஒவ்வொருவரும் காலையிலெழுந்திருந்து தனுர்மாசமாகையால் அம்மாதத்திற் சாதாரணமாய் செய்யப்பட்ட பூசைகளை நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். சிங்கார மாளிகைக்குக் காவலாளாக ஏற்படுத்தப்பட்ட மாதவன் அதிகாலையி லெழுந்திருந்து மற்றவேலையாட்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் குறிப்பிட்டு இராத்திரிகிளம் விஜயஞ்செய்த இரண்டு வீரர்களாகிய **ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி** யிவ்விருவர்கள் எப்போது எழுந்திருப்பார்கள் அவர்களுக்கு என்ன உபசாரம்செய்து வெகுமானம் பெறுவோமென் றெண்ணிக்கொண்டு காத்திருக்கும் வேளையில் தெருவில் மேளவாத்திய முழக்கம்கேட்டது. அந்த ஆரவாரத்தைக்கேட்ட சிறுவீரர்களிருவரும் படுக்கையை விட்டெழுந்து தங்கள் சால்வைகளை மேலே போர்வையிட்டு வெளியே கிளம்பினார்கள். தனுர்மாதமாகையாலும் திருவாதிரை நட்சத்திரத்திற்கு முன்தினமாகையாலும் மாணிக்கவாசகரை பெரிய விமானத்தில் எழுந்தருளப்பண்ணி பலவிதவாத்தியங்கள் முழங்கவும் வேதியர் பல்லாண்டோதவும் தாசிகள் நர்த்தனஞ்செய்யவும் அங்கங்கே ஓதுவார் திருவெம்பாவைப் பதிகங்களை மிருதுவான தொனியுடன் பூபாள ராகத்திற்பாடி வரவும் இவ்வித ஆடம்பரத்துடன் வருகிற திருக்கோலத்தைக் கண்ணுற்ற அடியார்கள் ஹரஹரவென்று முழக்கத்துடன் செய்த பக்தியைக்கண்ட வீரர்களிருவரும் தலைமீது கைகூப்பி,

வாதவூரனே யோலம்
வேதசாரனே யோலம்

என்று வணங்கித்தொழுது அன்பின் பெருக்கத்தினால் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக அஞ்சலிசெய்து நமஸ்கரித்தார்கள். உடனே மாணிக்கவாசகரும் தெருக்கடந்து மறுவீதியிற் றிரும்பினார். இந்த திருக்கோலத்தைத் தெரிசித்து ஞானசிகாமணியும், விவேகசிந்தாமணியும் சென்று மாளிகையின் விசித்திர அலங்காரங்களைக் காண்பிக்கும்படி மாதவனைக்கூப்பிட அவனடிபணிந்தோடிவந்து 'தங்கள் மனதின்படியே ஒவ்வொரு விசித்திரமும் தவறாதுகாட்டுகின்றேன். தந்தசுத்திமுதலிய காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நான் ஏற்பாடுசெய்த சிற்றுண்டியை யேற்றுக்கொள்ளுங்கள்' என்று வேண்டினான். அவ்வண்ணமே யிருவரும் தோட்டத்திற்குக் கிளம்பி தந்தசுத்தி முதலானவை செய்துகொண்டு மாதவனளித்த பலகாரங்களைப் புசித்து தாம்பூலந் தரித்துக்கொண்டு மாளிகையி னலங்காரங்களையும் ஆங்காங்கு மனதைக் களிப்புறச்செய்திருக்கும் சித்திர விநோதங்களையும் காணும்படி புறப்பட்டார்கள்.

அம்மாளிகையின் முன்னே இராஜாக்கள் கூடும் பெரிய கொலு மண்டபமொன்றிருந்தது. அந்த விசித்திரக்கூடத்தில் நிறையப் பூட்டு விளக்குகளநேகமிருந்தன. இதன்றி தரைமுழுதும் பட்டுப்பீத்தாம்பரத்தினு லலங்கரித்திருந்ததுமன்றி சோபாக்களும் கண்ணாடிக்கால்கள் நாட்டிய நாற்காலிகளும் காணப்பட்டன. ஒவ்வொருபக்கத்திலும் ஐந்தைந்து நிலைக்கண்ணாடிகளும் அக்கண்ணாடிகளைச்சுற்றி நாற்புறமும் கட்டிய ரசகுண்டுகளும் நிலைக்கண்ணாடிகளுக்கு நடுவில் தொங்கவிட்டிருக்கும் அரம்பை, மேனகை, ஊர்வசி, சீதா, தாரா முதலான இரவிவர்மாவால் எழுதப்பட்ட படங்களுமிருந்தன. சுருங்கச்சொல்லின் பெங்களூரில் கட்டப்பட்டிருக்கும் மைசூர் மகாராஜாவி னரண்மனையில் சோடித்திருக்கும் தர்பார் கூடம்போலவே சற்றும்பேதமின்றி யிருந்தது. அந்த விசித்திரத்தைப்பார்த்து உள்ளேசென்று மகாராஜாவின் படுக்கையறையும் மகாராணியின் பொழுதுபோக்குக்காக ஏற்பட்டிருந்த அறைகளையும் புத்தகசாலைகளையும் குழந்தைகள் தங்கவும் அச்சமின்றி யோடிவிளையாடவும் அமர்த்திய கல்யாணகூடங்களையும் கண்ணுற்றுப் பின்னர் தோட்டத்தினழகைக்காணச் சென்றார்கள்.

உடனே மாதவன் தோட்டவேலைக்கும் அதன் காவலுக்கும் சம்பளம்கொடுத்து ஏற்படுத்தப்பட்ட சிங்காரமென்னும் தோட்டக்காரனைக் கூப்பிட்டுத் தோட்டத்தின் வனப்பையெல்லாம் காட்டும்படி ஏவினான். அவ்வுத்தரவின்படியே சிங்கார மிருவரையு மழைத்துக்கொண்டு புஷ்பசெடிகளி னழகையும் மாமரச்சாலைகளையும் பூத்தரும்பிய கொன்றைமலர்ச் செடிகளையும் இன்னும் பலா, கொய்யா, வாழை, கமுகு, மாதுளை, கிச்சிலி, வாதுமை, விளா, புன்னை, கோங்கு- பாரிசாதம் மனோரஞ்சித முதலிய பலவிதசெடிகளி னற்புதங்களையும் காண்பிக்க அவைகளைக்கண்டு நடபாவியினருகே வந்தார்கள். அந்நடபாவியைச் சுற்றிலுமுள்ள விருக்ஷங்களின் அழகையும், அந்நடபாவியிற்றோன்று மவ்வுருவங்களின் பிரதிபிம்பத்தையும் அசட்டை செய்யாமல் நோக்கி வேடிக்கையாகச் செல்லுங்காலையில் முருகேசன் என்னும் ஓர் வேலையாள் 'சிங்காரம் இங்கேவா நமதரசன்புதல்வர் இருவரும் இங்கேவிளையாட வருகிறார்களாம் இப்போதுதான் சங்கதி தெரியவந்த தென்று சொல்லிக்கொண்டே கூப்பிட்டான். அவன் சொல்லிய சங்கதிகளை சாங்கோபாங்கமாய் விசாரிக்கப்போகிறவன் **ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி** யிருவரையும் நோக்கி' நீங்கள் வேடிக்கைகளைப் பார்த்திருங்கள் இதோபோய் வருகின்றேன் ஆனால் மேடையொன்று அலங்கரித்திருக்கிறது அதனருகிற் செல்லாமலும் அம்மேடையின் சிறுகதவைத் திறவாமலு மிருக்கவேண்டியது அது அரசனது ஆணை 'என்று குறிப்பிட்டுப் போய்விட்டான்.

இச்சிறுவீரர்க ளிருவரும் உல்லாசமாகக் தோட்டமுழுவதும் சுற்றிப்பார்த்து மறுபடியும் நடபாவியினருகே வந்தார்கள். **ஞானசிகாமணி** தன் அருமைத்தம்பியாகிய விவேகசிந்தாமணியை நோக்கி "இந்த தோட்டக்காரன்நமக்குச்சொன்ன சொல்லைக் கேட்டாயா? 'மேடை

யினருகிற் செல்லாமலும் அங்கிருக்கும் கதவைத்திறவாமலு மிருக்க வேண்டியது. அது அரசனது உத்திரவு, என்று சொன்னானே நீ வா அம்மேடையி னருகேசென்று என்ன விநோதமிருக்கிறது பார்ப்போமென" அதற்கு விவேகசிந்தாமணி 'நாம்வந்தவேலையை நாம்பார்த்துச் செல்லுவோம் அவன் அம்மேடையினருகே போகவேண்டாமென்று உத்திரவுசெய்திருக்க அவ்வுத்திரவைக் கடந்து ஏன் நடக்கவேண்டியதென்று மறுமொழிகூற, அப்படியல்ல அங்கு என்ன விசித்திர மிருக்கிறது பார்ப்போ மென்று தம்பியின் கையைப் பிடித்து இருவரும் அம்மேடையருகேசென்று அங்கே மூடியிருந்த சிறுகதவைத் திறந்தார்கள். உள்ளே மேடையும் அம்மேடையின்மேல் போட்டிருக்கும் பஞ்சணையையும் கண்டு சற்றுநேரம் உல்லாசமாக உட்காருவோமென்று இருவரும் நெருங்கி அப்பஞ்சணையின் மீது கைகளையூன்றி உட்கார்ந்தவுடனே திடீரென்று அப்பஞ்சணையானது ஐந்தடிதூரம் கீழே கொண்டுபோய் விட்டது.

அலங்கரித்திருந்த மேடையானது விசித்திரமாகக் கட்டப்பட்டிருந்தது. அம்மேடையின்கீழ் அமர்ந்திருக்கும் ஓர்வித சூத்திரத்தின் வல்லமையால் அப்பஞ்சணை பளுவுதாங்கமுடியாமல் கீழேகொண்டு போய்விட்டு மறுபடியும் தன் யதாஸ்தானத்திற்கு மீண்டது.

(இன்னும் வரும்.)

பி. ஷண்முகசுந்தரம்பிள்ளை, பி. ஏ.

LADY JANE GRAY.
லேடி ஜேன் கிரே.

நமது தேசத்துச் சக்கிரவர்த்தியான மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாருக்கு முன், அங்கிலேய ராஜ்யத்தை யாண்டுவந்த மன்னர்களில் ஒருவனாகிய எட்டாவது ஹென்ரி என்பவன் 15ம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்து தேசத்தில் அரசு புரிந்துவந்தான். இவனுக்கு 6மனைவிகள். அவர்களுக்கு மேரி, எலிஸா என்றிரண்டு புத்திரிகளும், எட்வர்ட் என்றொரு புத்திரனு முண்டானார்கள். தன் பிதாவின் காலம் முடிந்தபின்பு, எட்வர்ட் ராஜ்ய பாரத்தை வகிக்கத் தொடங்கினான். இவனுக்குச் சந்ததியே இல்லை. இவன் காலத்தில் ஜேன் என்னும் ஒரு ஸ்திரீ ராஜகுலத்தில் பிறந்து, சகலமான உத்தம குணங்களும், பொருந்தியிருந்தாள். இப்பெண்மணியின் சரித்திரத்தைப் பின்வருமாறு எழுதுவோம்.

இவள் 1536வருஷத்தில் பிரேட்கேட் என்ற ஊரில் கிரே என்ற குடிப்பெயருள்ள வம்சத்தில் ஜனித்தாள். இவளுடைய தாய்மேற்சொன்ன ஹென்ரி என்னும் அரசனுடைய சகோதரி. "விளையும் பயிர்முளையில்" என்பதுபோல ஜேன் இளமைப் பருவத்திலேயே கல்வியில் மிகுந்த பிரேமை யுள்ளவளாகத் தோன்றினாள். சாந்தகுணமும், மிகுந்த சௌந்தரியமும், பெருந்தன்மையும் இவளிடத்தில் கூடிவாழ்ந்திருந்

தன. பனிரெண்டாம் வயது முடியுமுன் ஏழுபாஷைகளில் தேர்ச
சியை அடைந்தாள். கல்வித்தேர்ச்சியன்றி இன்னும் ஜேன் இனிய
குரலுடைய வளாயும், பலவித வாத்தியங்களை உருக்கமாய் குற்றங்
குறையின்றி வாசிக்கத் திறமையுள்ளவளாயு மிருந்தாள். அக்கால
த்து முறைப்படி பெண்கல்வியில் முக்கியமான பூப்போடும் வித்தை
யையும் செம்மையாகக் கற்றிருந்தாள். இது தவிர வைத்திய சாஸ்
திரத்திலும் கொஞ்சம் பழக்கமுண்டு. இக்காலத்து தனிகர் வீட்டு
ப்பெண்களைப் போலல்லாமல், ஜேன் இராஜகுமாரியாயினும் பாகசாஸ்
திரத்திலும் தேர்ந்தவள். பணமிருந்தால் அழகும் தனக்குத்தானே
யுண்டாகும் என்பது உலகமொழி. ஆனால் இவைகளிரண்டு மிருப்பி
னும் கல்வித்தேர்ச்சியிருப்பது அரிது. ஏனெனில் செல்வம், அழகு
இவைகளுக்கும்கல்விக்கும் ஜன்மப்பகை. இதையே கவிவாணர்கள்
நாமகளுக்குப் பூமகள் மாமியாராதலின் அவர்களிருவருக்கும் பகை
யெனக்கூறுவார்கள். கல்வித்தேர்ச்சியடைந்தாலும், செல்வமுள்ள
வர்களுக்குச் செருக்கு உண்டாவது வழக்கம். இதுபற்றி நற்குணங்
கள் இவர்களை யடையா. இவ்வாறிருக்க செல்வத்திற் பிறந்த இந்த
மாதுக்கு கல்வியுடன் நற்குணங்களும் அமைந்திருந்தது ஆச்சரியமா
கத் தோற்றும். ஒருக்கால் இப்புதுமை கட்டுக்கதையோ வென்றெ
ண்ணினும் தகும். ஆனால் சரித்திரக்காரர் இப்பெண்மணியைப்பற்றி
இவ்வாறே செப்பியிருக்கின்றமையால் சந்தேகத்திற் கிடமில்லை.

இப்படியிருந்தும் ஜேனுடைய தாய்தந்தையர்கள் அவளை மிகவும்
கடுமையாக நடத்தினார்கள். “அடியாது மாடு படியாது” என்பதை
உறுதியாகக் கொண்டு அவர்கள் அவளுடைய சிறுபிழைகளையும் பெரி
தாகப்பாராட்டி தண்டனை செய்வார்கள். பெற்றோர்களிடத்தில் நேச
மில்லாமல் கீரியைக் கண்ட பாம்புபோல் நடந்து வந்தாள். சதாகடு
மையாகவே யிருக்கும் அவர்களுடைய முகத்தைக்கூட பார்க்கமன
மில்லாமல் தன் புத்தகங்களையே துணையாகக் கொண்டிருப்பாள். அப்
புத்தகங்களிலுள்ள பெரியோருடைய விவேகம் நிறைந்த இனிய
மொழிகளினால் தன்மனத்துயரமெல்லாம் நீங்கி பெருந்தன்மையையும்,
மனோதைரியத்தையு மடைவாள். ஒருநாள் ஜேன் தந்தையின் மித்தி
ரனான ஒருவர் அவர்களைக் காணும் பொருட்டு அவர்கள் வீட்டுக்குச்
சென்றபோது ஜேன் மாத்திரம் தனியாக ஒரு புத்தகத்தைப் படித்துக்
கொண்டு வீட்டிலிருந்தாள். உன்பெற்றோர்கள் எங்கே என்று அவர்
கேட்க வேட்டையாட வெளியிற் சென்றார்களென்று ஜேன் மறு
மொழி கூறினாள். நீயும் போகவில்லையா வென்று அவர்வினவ ஜேன்
நான் புத்தகத்திலிருந்து அடையுமின்பமேயின்பம் வேட்டையாடுவ
தில் அவர்களுக் குண்டாகும் இன்பம் மாயையே யொழிய வேறல்ல
வென்று சொன்னாள். இது நடந்த பொழுது ஜேனுக்கு வயது 14.
இப்படி யிருக்கையில் மேற்சொன்ன எட்வர்ட் என்னுமரசனுடைய
ஆளுகையில் கடைசியாண்டான 1553-ம் ௵ பிறந்தது. அரசனு
டைய துர்ப்பலமான சரீரத்தைக்கண்டு அவன் அந்திய காலம் கிட்டி
விட்டதென்று அறிந்து, மந்திரியான நார்தம்பர் லண்ட் பின்வருமாறு

யோசனை செய்தான் :—எட்வர்டுக்குச் சந்ததியில்லாமையால் அவனுக்குப் பிறகு அவன் சகோதரியான மேரி கிரமமாய்ப் பட்டத்துக்கு வரவேண்டும். ஆனால் அவளோ நமது மதத்துக்கு ஜன்மசத்துரு, ஆதலால் ராஜ்யத்தை எப்படியாவது நம்முடைய வம்ஸத்துக்கு கொண்டு வரவேண்டும். இதற்கு ஒரே மார்க்க மிருக்கிறது. அதாவது நம்முடைய புத்திரன் கில்போர்டு (Gil ford) க்கு ஜேன் என்பவளை விவாகம் செய்து அவளுக்குப்பட்டம் வரும்படி அரசனிடமிருந்து ஒருஉயில் எழுதிவாங்கி விடவேண்டியது, என்று தீர்மானஞ்செய்தான்.

(இன்னும்வரும்.)

பி. குருசுவாமி அய்யர், பி. ஏ.

விடுகதைகளுக்கு விடை.

1. புளியமரம்.
2. தென்னமரம்.
3. குருவிக்கூடு (இவைகள் மரங்களில் தொங்குவதை காணலாம்.)

கணக்கு.

1-வது. அக்குளத்திலிருந்த தாமரைகள் மூன்று, வந்த கிளிகள் நான்கு.

நெம்பர்.	2-வது கணக்கிற்கு விடை.	௮ படிப் பாத்திரம்.	௫ படிப் பாத்திரம்.	௩ படிப் பாத்திரம்.
1	8 படி பாத்திரத்தில் விட	8	0	0
2	8 படி பாத்திரத்திலிருந்த நெய்யை. 5படியில்விட	3	5	0
3	5 படியில் உள்ள நெய்யை 3 படியில் விட ...	3	2	3
4	3 படியில் உள்ள நெய்யை. 8 படியில் விட ...	6	2	0
5	5 படியில் உள்ள 2 படி நெய்யை. 3 படியில் விட	6	0	2
6	8 படியில் உள்ள 6 படி நெய்யை. 5 படியில் விட	1	5	2
7	5 படியில் உள்ள 5 படி நெய்யை. 3 படியில்விட	1	4	3
8	3 படியில் உள்ள நெய்யை. 8 படியில் விட ...	4	4	0

இவ்விதமாகப் பாகித்துக் கொண்டனர்கள்.

ச. நீ. பார்வதியம்மாள்.